1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 59, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

59—

கோழித்தீவனத்திற்கு தரக் கட்டுப்பாடு.

*1070 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோழித்தீவனம், கோழி மருந்து ஆகியவற்றிற்கு தரக் கட்டுப்பாடு கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். கோழித்தீவனத்திற்கு தரக்கட்டுப்பாடு கொண்டு வரும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளது. ஆனால் கோழி மருந்துக்கு தரக் கட்டுப்பாடு திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அனைத்து கால்நடை மற்றும் கோழி தீவனங்களின் தரக்கட்டுப்பாட்டினை நிர்ணயிப்பதற்காக அரசிடம் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே, கோழிப் பண்ணை விவசாயிகளினுடைய உற்பத்தித் திறன் 30-லிருந்து 40 விழுக்காடு வரை குறைவாக உள்ளது. இதன் காரணமாக முட்டையினுடைய விலையும், இறைச்சியினுடைய விலையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. தரமான தீவனமும், தரமான மருந்துகளும் மார்க்கெட்டிலே கிடைக்காத காரணத்தால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதற்காக, நாமக்கல்லில் குறைந்த பட்சம், தனி கட்டுப்பாட்டு அதிகாரியையாவது நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.